
# விளையாட்டுவழி மகிழ்வுறு தமிழ்மொழி கற்றலை வீட்டில் செயற்படுத்துதல்




பெற்றோர்களுக்கு ஒரு வழிகாட்டி- உங்கள் குழந்தையுடன் விளையாடி மொழியை வளர்க்கலாம்.



# இன்றைய மொழிச் சூழல் என்ன?

## வீட்டில்

- ஆங்கிலம் முதன்மை மொழியாக உள்ளது
- தமிழில் பேசும் நேரம் குறைவு


## பள்ளியில்

தமிழ் இரண்டாம் மொழியாகக் கற்பிக்கப்படுகிறது



இந்த இடைவெளியை எப்படி நிரப்பலாம்?

# பிள்ளைகளின் மூளை வளர்ச்சி (காலக்கட்டம்)




இந்தக் குறுகிய, ஆனால் முக்கியமான காலக்கட்டத்தில் தமிழைக் கொண்டு சேர்ப்பது மிக அவசியமாகும்.

# விளையாட்டு என்பது கற்றலுக்குரிய மிகச் சிறந்த இயந்திரம்.




- விளையாட்டுவழிக் கற்றல் என்பது நோக்கத்துடன் வடிவமைக்கப்பட்ட விளையாட்டுகளின் வாயிலாகப் பிள்ளைகளுக்கு அர்த்தமுள்ள கற்றல் அனுபவங்களை ஏற்படுத்தித் தருதலாகும்.
- மனனம் செய்வதைவிடச் சூழல்களை மையப்படுத்திய விளையாட்டுகளின்மூலம் பிள்ளைகளின் சொற்களஞ்சியம் மூன்று மடங்காக அதிகரிக்கின்றது.

*Source : International Journal of Research in Business & Social Sciences, 2023*

# தமிழ்மொழிக் கற்றலுக்கு விளையாட்டு ஏன் சிறந்த கருவி?

## தயக்கம் குறையும்

- தயக்கமும் தவறு செய்தல் பற்றிய பயமும் குறையும்.
- பிள்ளைகள் முயன்றிடத் தயங்கமாட்டார்கள்.

## அர்த்தமுள்ள சூழல்

- கதைகளும் பாடல்களும் புதுச் சொற்களைப் பிள்ளைகளுக்கு இயல்பாக அறிமுகஞ்செய்கின்றன.

## பண்பாட்டுத் தொடர்பு

- மொழி அடையாளத்தையும் குடும்பப் பிணைப்பையும் வலுப்படுத்துகின்றன.



# விளையாட்டு வகைகள்

## சுதந்திர விளையாட்டு Free play

- பிள்ளைகள் தாமே விளையாட்டைத் தேர்வு செய்கின்றனர். பெரியவர்கள் பார்வையாளர்களாக இருப்பர்.
- கற்பனை, ஆர்வம், மொழிப் பயன்பாடு இயல்பாக உருவாகும்.
- உதாரணம்: பொம்மைகள் கொண்டு கதை உருவாக்குதல்

## வழிநடத்தப்பட்ட விளையாட்டு Guided play

- பெரியவர்கள் மெதுவாக வழிகாட்டுவர்.
- கேள்விகள் கேட்பதுமூலம் தமிழில் பேச ஊக்குவிக்கலாம்.
- உதாரணம்: “இது என்ன?”, “இது என்ன செய்கிறது?”, “ஏன் இவ்வாறு நினைக்கிறாய்?”

## கட்டமைக்கப்பட்ட விளையாட்டு Structured play

- தெளிவான கற்றல் நோக்கங்கள் கொண்ட விளையாட்டுகள்
- சொற்கள் அல்லது வாக்கியங்களைப் பயிற்சி செய்ய உதவும்.
- உதாரணம்: தமிழில் அட்டைகள்– சொல்லைப் படத்துடன் இணைத்தல்

# தமிழ்மொழி விளையாட்டுகளை விளையாட, நீங்கள் தமிழாசிரியராக இருக்கவேண்டியது அவசியமா ?

- விளையாட்டின்போது பிழைகளை உடனடியாகச் சுட்டிக்காட்டுதல்
- பிள்ளைகள் தயார்நிலையில் இல்லாதபோது தமிழைப் புகுத்துதல்
- பிள்ளைகளின் மொழித்தரத்தை ஒப்பிட்டுப் பேசுதல்
- விளையாட்டைப் பாடமாக மாற்றிவிடுதல்


- எளிய தமிழ்ச் சொற்களை அன்றாடச் செயல்களில் சேர்க்கவும்
- பிள்ளைகளுக்கு வழிநடத்த வாய்ப்பளிக்கவும்
- சிறு பாராட்டுகள்மூலம் நம்பிக்கையை வளர்க்கவும்
- பாடவும், பேசவும், கதைகள் சொல்லவும் ஊக்குவிக்கவும்

# உங்கள் பிள்ளைகளுடன் நீங்களும் விளையாடலாம்!



## கதை சொல்லும் நேரம்

பொம்மைகள் அல்லது களிமண் உருவங்களைப் பயன்படுத்திக் கதையை உருவாக்குங்கள்.



## விளம்பரம் செய்தல்

விருப்பமான ஒரு பொருளைப்பற்றி 5-10 நிமிடங்களுக்கு விற்பனையாளரைப்போல் தமிழில் பேசி விளம்பரம் செய்யுங்கள்.



## சொல் விளையாட்டு

வீட்டில் உள்ள பொருள்களைத் தமிழில் வர்ணித்து, விடுகதை போன்று கூறி அடையாளங்காணச் சொல்லுங்கள்.



## அட்டை விளையாட்டுகள்

தமிழ் எண்கள், சொற்கள், நினைவாற்றல் அட்டைகள் கொண்டு விளையாடுங்கள்.



## சமையல் நேரம்

சமையல் பொருள்களின் பெயர்களையும் எளிய செய்முறையையும் தமிழில் சேர்ந்து சொல்லுங்கள்.



## கதைக்கற்கள்

கற்களில் படங்கள் வரைந்து, அவற்றைக் கொண்டு சிறிய கதையைக் கூறுங்கள்.

# தொட்டுணர்தல்வழி விளையாடுதலும் பாவனைவழி விளையாடுதலும்



**தொட்டுணர்தல்வழிக் கற்றல்**

மணல் தட்டில் எழுத்துகளை வரைவது விரல் அசைவுகளை மேம்படுத்தவும், வரிவடிவங்களை எளிதாக நினைவில் கொள்ளவும் உதவுகிறது.

சாதம்

பருப்பு

ரசம்



**பாவனைவழிக் கற்றல்**

வாழை இலையில் உணவைப் பரிமாறுவதுபோல் நடிக்கும்போது, ‘சாதம்’, ‘பருப்பு’, ‘ரசம்’ போன்ற சொற்களை இயல்பாகப் பயன்படுத்தலாம். ஒரு புதிர் அங்கமாகவும் விளையாடலாம்.

# இயற்கைப் பொருள்கள், மறுசுழற்சிப் பொருள்கள் கொண்டு விளையாடுதல்

## எளிதில் கிடைக்கும் பொருள்கள்

- இலைகள், கற்கள், குச்சிகள், விதைகள்
- அட்டைப் பெட்டிகள், , காகித உறிஞ்சுக் குழாய்கள், புட்டிகளின் மூடிகள்
- பழைய துணி, நூல், செய்தித்தாள்கள்




## தமிழில் பேசும் வாய்ப்புகள்

- நிறம், வடிவம், அளவு, எண்ணிக்கைபற்றிச் சொல்லுங்கள்
- “இதைக் கொண்டு என்ன உருவாக்கலாம்?” என்று கேளுங்கள்
- உருவாக்கியதைப்பற்றிக் கதை சொல்லச் சொல்லுங்கள்

# உங்கள் வாராந்திர விளையாட்டுப் பயணம்

தினமும் 10–15 நிமிடங்கள் இந்த நடவடிக்கைகளுக்கு நேரம் ஒதுக்கினால் போதும்

## திங்கள் (Monday)



**கதை நேரம்.**
ஒரு பக்கத்தைப் படித்து, ‘யார் இது?’, ‘எப்படி?’ போன்ற கேள்விகள் கேட்டுப் பேசவும்.

## செவ்வாய் (Tuesday)



**பாடல் நாள்**
ஒரு பாட்டுப் பாடி, கைதட்டி, ஆடி, பாவனைசெய்து காட்டவும்.

## புதன் (Wednesday)




**சொல் வேட்டை**
வீட்டில் உள்ள 5 பொருள்களைக் கண்டுபிடிக்கச் சொல்லித் தமிழில் அவற்றின் பெயர்களைச் சொல்லச் சொல்லவும் .

## வியாழன் (Thursday)



**பேசுதல்**
திரையில் பார்க்கும் ஒரு காட்சியை நிறுத்தி, அதைப்பற்றி விவாதிக்கவும்.

## வெள்ளி (Friday)



**சுதந்திர விளையாட்டு**
பிள்ளை தேர்ந்தெடுத்த விளையாட்டுக்குரிய சொற்களை நீங்கள் தமிழில் கூறி விளையாடவும்.

## சனி (Saturday)



**குடும்ப நேரம்**
தாத்தா, பாட்டி அல்லது மூத்த உறவினரை ஒளிக்காட்சிவழி அழைக்கவும் / சேர்ந்து சமைக்கவும்.

## ஞாயிறு (Sunday)



**ஓய்வு, திருப்பம் செய்தல்**
இந்த வாரத்தில் கற்றுக்கொண்ட சொற்களை வரைந்து காட்டி நினைவுகூர உதவவும். .

# கற்றல் விளையாட்டுச் சுழற்சி



**படிநிலை 1– திட்டமிடுதல்**

தெளிவான மொழி இலக்குகளுடன் செயற்பாடுகளை வடிவமைத்தல்.

நூல்களையும் கருப்பொருள்களையும் நோக்கத்துடன் தேர்ந்தெடுத்தல்

**படிநிலை 2– ஒருங்கிணைத்தல், விளையாடுதல்**

விளையாட்டிற்குமுன், சொற்களை அறிமுகப்படுத்துதல். ‘இன்று என்ன நடக்கிறது?’ என்று கேட்டு ஆர்வத்தைத் தூண்டுதல். இணை விளையாட்டாளராக உள்ளே நுழைந்து, தமிழில் பேசுதல்.

**படிநிலை 3– விவரித்தல்**

விளையாட்டிற்குப் பிறகு, சொற்களை மீண்டும் பார்வையிடுதல், அன்றாட வாழ்வுடன் இணைத்து, வாசித்தலுக்கும் எழுதுதலுக்கும் கொண்டு செல்லுதல்.

# நடவடிக்கை நேரம்!

(இப்போது உங்கள் நேரம். தயக்கத்தைத் தகர்ப்போம்!)

## 1 உருவாக்குங்கள்!

- களிமண் வழங்கப்படும்
- உங்கள் குழந்தைக்குப் பிடித்த ஒரு சிறிய உருவத்தை அல்லது விலங்கைச் சேர்ந்து உருவாக்குங்கள்.

## 2 பெயரிடுங்கள்!

Name

- அந்த உருவத்திற்குத் தமிழில் ஓர் அழகான பெயர் கொடுங்கள்.
- 'ஏன் இந்தப் பெயர்?' என்று தமிழில் கேட்டு 1 நிமிடம் கலந்துரையாடுங்கள்.

## 3 கதை சொல்லுங்கள்!

- உங்கள் பிள்ளையோடு சேர்ந்து தமிழில் அந்த உருவத்தைப்பற்றி இரண்டு அல்லது மூன்று வாக்கியங்களில் ஒரு கதையைக் கூறுங்கள்.

**பிழைகளைப்பற்றிக் கவலைப்பட வேண்டாம்;
மொழி விளையாட்டில் மகிழ்ச்சியே முதன்மையானது!**

NotebookLM



# ஒவ்வொரு விளையாட்டும் ஒரு பாடம்.
# ஒவ்வொரு கதையும் ஒரு விதை!

### செயற்பாட்டைத் தேர்ந்தெடுங்கள்!

இந்தப் பயிலரங்கிலிருந்து ஏதேனும் ஒன்றைத் தெரிவுசெய்து இந்த வாரம் முயன்றிடுங்கள்.

### மின்னூல்கள்

ECDA இணையத்தளத்திலிருந்து இலவசத் தமிழ் மின்னூல்களைப் பதிவிறக்கம் செய்யுங்கள்.

### தமிழ்ப் பாடல்கள்

இன்று இரவு உறங்கச் செல்வதற்குமுன் ஒரு தமிழ்ப் பாடலை இணைந்து பாடுங்கள்.

### ஆசிரியருடன் உரையாடல்

பள்ளிக் கற்றலை வீட்டில் இணைப்பது குறித்து ஆசிரியருடன் கலந்துரையாடுங்கள்.

### பெற்றோர் குழுக்கள்

புதிய கருத்துகளைப் பகிரவும், தெரிந்துகொள்ளவும் ஆர்வமுள்ள பெற்றோர் குழுக்களில் இணையுங்கள்.



தமிழ்மொழி ஒரு பாடம் மட்டும் அன்று;
ஒரு பிள்ளையின் பாரம்பரியம், அடையாளம்.

நன்றி!

தொடர்புக்கு: Yengadayson_nantheini@moe.edu.sg